JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

Calendar }

Miscellaneous } Case No : - CC//214/ 2016

: Prosecution P.W - 5

NAME : முகமது கனி

FATHER'S NAME :

VILLAGE :

TALUK :

CASTE :

CALLING :

RELIGION :

AGE :

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 26.06.2025.

முதல் விசாரணை

நான் தற்போது புளியங்குடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2015 ம் வருடம் சொக்கம்பட்டி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த போது 23.08.2015 ம் தேதி புளியங்குடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் பேரில் புளியங்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த திருவேட்டநல்லூர் கற்பகனாட்சியம்மான் கோவில் தெரு ராமர் என்பவரின் மனைவி கண்ணம்மாள் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையம் 11.00 மணிக்கு வந்து மேற்படி புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலையக் குற்ற எண் 188/2015 இதச பிரிவுகள் 294(பி),323, 324,506(2) and 4 of TNPHW Act வின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். மேற்படி முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் அசல் நகலை கனம் தென்காசி நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை

விசாரணைக்காக விசாரணை அதிகாரியின் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

என்னுடன் மருத்துவமனைக்கு வாக்குமூலம் வாங்க என்னுடன் யார் வந்தார் என்றால் நான் மட்டும் தான் சென்றேன். என்னிடம் காண்பிக்கப்படும் அசாஆ.1 ஆன புகார் வாக்குமூலத்தில் உள்ள எழுத்துக்கள் என்னுடையது தான். மேற்படி அசாஆ.1ன் Recorded by me என எழுதபட்டுள்ளதும் என்னுடைய எழுத்து கிடையாது என்றால் சரியல்ல, என்னுடைய எழுத்து தான். கண்ணம்மாளிடம் புகார் வாக்குமூலத்தில் ஒரு கையெழுத்து தான் வாங்கினேன். நான் சொல்லும் நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் வாக்குமூலம் பெற செல்லவில்லை என்றாலும் அதில் உள்ள எழுத்துககள் என்னுடைய எழுத்துக்கள் கிடையாது என்றாலும் நான் சொன்ன நேரத்தில் இந்த வழக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் கண்ணம்மாளுக்கு கையெழுத்து போடவே தெரியாது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi